மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 140, திரு டி. சுதர்சனம், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

பின்னி தொழிற்சாலையை திறக்க முயற்சி.

*140-

*1012—திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள பின்னி தொழிற்சாலையைத் திறப்பதற்காக அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பின்னி ஆலையை மூட ஆலை நிர்வாகம் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25(0)ன் அனுமதி கோரியது. ஆலையை மூட அனுமதி மறுத்து தொழிலாளர் ஆணையர் 8—2—1991-ல் ஆணை பிறப்பித்தார். இத்தகைய ஆணையை எதிர்த்து நிர்வாகம் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் அனுமதித்து 27—9—1991 ஆம் தேதியிட்ட தனது தீர்ப்பில் தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் மறுபடியும் விசாரித்து ஆணை பிறப்பிக்குமாறு தொழிலாளர் ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பி. அண்ட் சி. மில்லை மூடுவதற்கு தொழில்துறை ஆணையரே மனு செய்ததாக பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. தமிழக அரசு தொழிலாளர்களுக்கு நன்மை செய்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 400 ரூபாய் அவர்களுக்கு அளித்து இருக்கிறார்கள். இந்த நிலையில் தொழில் துறை ஆணையர் அவர்கள் எந்த அடிப்படையில் அவ்வாறு மனு செய்தார் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் ஆணையர் மனு செய்யவில்லை. நிர்வாகம் ஆலையை மூட அனுமதியை

1991 அக்டோபர் 3]

கோரியது தொழிலாளர் ஆணையரிடத்தில். தொழிலாளர் ஆணையர் அனுமதி மறுத்தார். அதை எதிர்த்து நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கில் மறுபடியும் விசாரிக்குமாறு தொழிலாளர் நல ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தின் தீர்ப்பிலே கூட பங்குதாரர்களை எல்லாம் கலந்து ஆலோசிக்கவில்லை. இன்னும் பல காரணங்களால் அந்த வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் காலக் கெடுக் கொடுத்து அதை விசாரிக்குமாறு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு கால நிர்ணயம் செய்து இந்த காலத்திற்குள்ளாக இந்த மில்லைத் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தனியார் துறையைச் சார்ந்த ஆலையாகும், ஆக ஆலையை நடத்துவதும், நடத்தாமல் இருப்பதும் ஆன முக்கிய பொறுப்பு, அந்த நிர்வாகத்திற்கு இருக்கிறது. நாம் தொழிலாளர் நலத்தைக் காப்பதற்காக, ஆலை தொடர்ந்து நடக்க வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் கோர்ட்டிலே போய், மேலும் தாமதப்படுத்துகிற அளவுக்கு உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். இது குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு பேசும்போதுகூட, மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்திலே சொல்லியிருக்கிற அந்த நிதி நிறுவனங்களினுடைய சார்பாக, டைரக்டர்களே தான் போர்டிலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்துதான் இதுமாதிரியான ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். மறுபடியும் அவர்களிடத்திலேபோய் கேட்க வேண்டியது சரியல்ல என்று அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது குறித்து கருத்து சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு நாம் தலைவணங்க வேண்டும். அந்த முறையிலே தொழிலாளர் நல ஆணையாளர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கிடையிலே, நாம் நிதி நிறுவனங்களோடு பேசவும், சர்க்கார்

தரப்பிலே ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு என்ன உதவி செய்ய முடியும்; என்ன உதவியை கேட்கிறார்கள். என்பது குறித்துப் பேசவும் அதிகாரிகளோடு பேசி நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு : பின்னியைப் பற்றிய கேள்வி. கோயம்புத் தூருக்கு போய்விடக்கூடாது.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடிய தொழிற்சாலைகளை அரசு திறக்க எடுத்த நடவடிக்கைகள் எந்த அளவில் உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அவையில் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரிவிப்பேன், தனிக் கேள்வி போட்டால். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. செல்வராஜ். கேள்வி, பின்னியைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

திரு. கி. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை மூடுவதற்குக் காரணமே மிகவும் மோசமான சூழ்நிலையில் முன்பு மாற்றப்பட்ட இயந்திரங்கள் தான். அந்த இயந்திரங்களை மாற்றி புதிய தாக நவீன இயந்திரங்களை அவர்கள் பொருத்தி சிறப்பாக நடத்துவதற்கு, அரசு அவர்களை அழைத்துப் பேசி, நவீன இயந்திரங்கள் வாங்க கடன் வசதி செய்து கொடுத்தால், நிச்சயம் அந்தஆலை என்றைக்கும் மூடாமல் இருப்பதற்கு வசதியாக இருக் கும் எனக் கேட்டு, அமைச்சர் அவர்கள் ஆலை நிர்வாகத்தினரை அழைத்துப்பேசி. நவீன இயந்திரங்களை வாங்க ஏற்பாடுசெய்து கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடுகளையெல் லாம் ஆலை நிர்வாகம் செய்திருக்கிறது. ஆனால் இப் போதுள்ள பிரச்சினை, பின்னி ஆலையை நடத்துவதற்கு, ஆலை யின் துணி பதப்படுத்தும் பிரிவுக்குத் தேவையான தண்ணீர் வசதி இல்லையென்றும், அதனால் இலாபகரமாக இயங்க முடியவில்லை என்றும், குறைவான உற்பத்தி இருக்கிறது. என்றும், தொடர்ந்து ஏற்பட்டு வரும் நஷ்டம் காரணமாகவும் அவர்கள் ஆலையை மூடவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆக, அந்த புராஸஸிங் யூனிட்டை இங்கே நடத்தாமல், புவனகிரிக்கு மாற்றினால் தான் அந்த ஆலையை லாபகரமாகக் கொண்டுவரமுடியும் என்று அவர்கள் சொல்லித்தான், இந்த

1991 அக்டோபர் 3]

மாதிரியான ஒரு நடவடிக்கையில் நிர்வாகம் ஈடுபட்டிருக்கிறது. மற்றபடி, நவீனப்படுத்துவதற்கான முயற்சிகளை அவர்கள் தனியாக மேற்கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தேவையான கடன் வசதியைப் பெறவும், அவர்கள் ஏற்பாடு செய்திருக்கி றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஜி. வேணு கோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னி நிர்வாகத்தைப் பொறுத்தவரை யில் இதை எப்படியாவது மூடவேண்டுமென்ற நிலையில்தான் அவர்கள் இந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டிலே முதன்முதலாகத் துவங்கிய ஆலை, இந்த ஆலை என்பதால் நம்முடைய அரசுக்குக் கெட்டபெயர் வந்து விடக்கூடாது என்ற காரணத்தின் அடிப்படையிலே நம்முடை அரசு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து, இந்த ஆலையை எப்படியாவது திறப்பதற்கு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி ரூபாய்க்கு மேலே, இதிலே முதலீடு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள், தினமும் ஏற்பட்டு வருகிற நஷ்டத்தையும் அவர்கள் ஏற்று கொண்டு வருகிறார்கள். அதைப் பார்க்கிறபோது, அவர்கள் ஆலையை நடத்துவதற்காகத்தான் முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் நினைக்க வேண்டியிருக் கிறதே தவிர, அவர்கள் மூடுவதற்காக இத்தனையையும் செய்து கொண்டிருப்பதாக சந்தேகிக்க இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 141, டாக்டர் ச. சுந்தரராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

கைத்தறி நெசவாளர்களுக்கு E.S.I. மருத்துவ வசதி.

*141 — 1730— டாக்டர் ச. சுந்தரராஜ்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறி நெசவாளர்களுக்கு E. S. I. மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?